

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் மகளிருக்கு மின்சாரத்தில் இயங்கும் ஆட்டோ கடன் வழங்கும் விழா சேலம், அழகாபுரம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சமுதாயக் கூட்டத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., டி.எம்.செல்வகணபதி எம்.பி., சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், இரா.அருள் எம்.எல்.ஏ., எஸ்.சதாசிவம் எம்.எல்.ஏ. மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பங்கேற்றனர்.

### மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும்

# நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்த நாளில் அவரது நினைவைப் போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 2-

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**தமது நடிப்பாற்றலால் உலகையே வியக்க வைத்து வரலாறாக வாழ்ந்து மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களது பிறந்த நாளில் அவரது நினைவுகளைப் போற்றுகிறேன்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கரூர் த.வெ.க. கூட்ட நெரிசலில் சிக்கி

# உயிரிழந்தவர் குடும்பத்திற்கும் - காயமடைந்தவர்களுக்கும் நிதி உதவி!

## செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. நேரில் வழங்கினார்!

கரூர், அக்.2-

கரூரில் ஏற்பட்ட துயரச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் 5 நபர்களுக்கு தலா ரூ.1 லட்சத்திற்கான காசோலைகளையும், உயிரிழந்த 5 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10லட்சத்திற்கான காசோலைகளையும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி 28.09.2025 அன்று கூட்ட நெரிசல் காரணமாக உயிரிழந்தவர்களில் 18 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 10 லட்சத்திற்கான காசோலைகளை வழங்கியதைத் தொடர்ந்து,

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காயமடைந்து தீவிர சிகிச்சை பெற்று வரும் 5 பேருக்கு தலா ரூ.1 லட்சம் காசோலைகளையும்.

கரூர் ரெத்தினம்சாலை பகுதியைச் சேர்ந்த சுமதி (50), காமராஜபுரம் பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் (23), வேலுச்சாமிபுரம் பகுதியைச் சேர்ந்த பழனியம்மாள்(11), கோகிலா(14), சுகுணா (65), எல்என்.எஸ் கிராமம் பகுதியைச் சேர்ந்த ரவிகிருஷ்ணன் (32), உள்ளிட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று உயிரிழந்த நபர்களின் வீட்டிற்கு நேரில் சென்று அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10லட்சத்திற்கான காசோலைகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி வழங்கினார்.

முன்னதாக கரூர் பாரதி நகர் பகுதியைச் சேர்ந்த கவின் (31), பிச்சம்பட்டி பகுதியை சேர்ந்த விஜயராணி(42), அரவக்குறிச்சி குமராண்டான்வலசு பிருந்தா (21), தொக்குபட்டி பகுதியைச் சேர்ந்த அஜிதா (20), வேலாயுதம்பாளையம் பகுதியை சேர்ந்த திருமதி ஜெயந்தி (45) உள்ளிட்ட பகுதிகளுக்கு உயிரிழந்த நபர்களின் வீட்டிற்கு நேரில் சென்று அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10.லட்சத்திற்கான காசோலைகளை அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி ஆகியோர் வழங்கினார்கள்.

மேலும் உயிரிழந்த நபர்களில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் அவர்களுடைய குடும்பத்தினரிடம் வழங்கப்பட இருக்கிறது.

இந்த நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் வெ.கவிதா, துணை மேயர் ப.சரவணன், மருத்துவக் கல்லூரி முதல்வர் புவித்தா, மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில்!

# திருவொற்றியூர் நகர முன்னாள் அவைத் தலைவர் கே.பரசுராமன் 33 ஆம் நினைவு நாள்!

## குறிஞ்சி எஸ்.கணேசன், இரா.முருகேசன், கே.பி.சொக்கலிங்கம் மலரஞ்சலி!

சென்னை, அக்.2 -

திருவொற்றியூர் தொகுதியில் மீனவர் கிராமங்களில் கழகத்தை வளர்த்த வரும், திருவொற்றியூர் நகர கழகத்தின் அவைத் தலைவராகவும், திருவொற்றியூர் நகராட்சியில் மூன்று முறை நகர மன்ற உறுப்பினராக இருந்து மக்கள் பணியாற்றியவரும், மீசைக்காரர் என்று தலைவர் கலைஞர் அவர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட கே.பரசுராமன் அவரது நினைவு தினத்தை முன்னிட்டு கே.வி.கே. கிராமத்தில் அமைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தலைமையில் மறைந்தும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிற கே.பரசுராமன் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் இரா.முருகேசன், 5வது வட்டக் கழக செயலாளர், சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான கே.பி.சொக்கலிங்கம், திருவொற்றியூர் கிழக்குப் பகுதி அவைத் தலைவர் ஆர். சி.ஆசைத்தம்பி, பழவேற்காடு அளவி பாய், தலைமைக் கழக பேச்சாளர்கள் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, வா.கருணாநிதிஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் ராயபுரம் சு. சேகர், 14வது அ வட்ட செயலாளர் ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதி குட்டி என்கிற எத்திராஜ்,

வி.கே.ஏழுமலை,எம்.எஸ். நாகலிங்கம், கி.ராஜவேல், கோவிந்தராஜ், கோபால், எம்.எஸ்.பாண்டியன் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு அன்னாருக்கு நினைவஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பொதுமக்கள் 2000 பேருக்கு அசைவ உணவு (பிரியாணி) வழங்கப்பட்டது.



கோவை கிராஸ்கட் சாலையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மாவட்டக் கழக அலுவலகத்தில் கோவை மாநகர் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர், தலைமைக் கழக பேச்சாளர், மொழிப்போர்த் தியாகி ஈஸ்வரி ராதாகிருஷ்ணனின் 2வது நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாநகர் மாவட்ட துணை செயலாளர் கல்பனா செந்தில், கழக தீர்மானக்குழு உறுப்பினர் செல்வராஜ், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச் செழியன், துணை அமைப்பாளர் சரவணன், பிரபாகரன், ரத்தினகுமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணிகண்டன், இப்னுமசூது, வேலாண்டிபாளையம் பகுதி துணை அமைப்பாளர் பாலுமணி, வேலுமணி, ராதாகிருஷ்ணன், வட்டக் கழக செயலாளர்கள் சிவக்குமார், பொன்ராஜ், ஆர்.எஸ்.புரம் பூபாலன், விவேகானந்தன், வணங்காமுடி, செல்வம் மற்றும் ராதாகிருஷ்ணன், அசோக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




